ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2297/26 - 2022 සැප්තැම්බර් මස 12 වැනි සඳුදා - 2022.09.12

2297/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: BD/ELL/LND/3/AQUSN/32.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2019/MV/394.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 69B, ஹீல்ஓய கிராம அலுவலர் பிரிவில், உடுகும்பல்வெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ.27, பிற் சேர்க்கை இல. 117, தாள் இல. 116 மற்றும் 2022.01.25 ஆந் திகதிய இறுதிக் கிராம வரை படத்தில் துண்டு இல. 1570 என குறிப்பிடப்பட்ட சுமார் 4.7344 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய "கல்ஹின்னே பதன" எனும் காணித்துண்டின் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. கந்தவல வத்தை - காணியின் பெயர்: கல்ஹின்னே விஸ்தீரணம்: 4.7344 ஹெக்டயார்.**

எல்லைகள்:

வடக்கு: துண்டு இல. 13CY; கிழக்கு: துண்டு இல. 13CY, 1571, 580, 579, 577, 576, 574, 566 மற்றும் 1572; தெற்கு: துண்டு இல. 13CY, 1571, 580, 579, 577, 576, 574, 566 மற்றும் 1572 மற்றும் 1573 (உ.வ.385700); மேற்கு: துண்டு இல. 1573 (உ.வ. 385700) மற்றும் 13CY.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி

எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு எல்ல பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்ககளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இந்திக கயான் பதிரண,
பிரதேச செயலாளர்
எல்ல.

பிரதேச செயலகம்,
எல்ல.
2022, செத்தெம்பர் 07.

EOG 09 - 0111